பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 10 2025 TUESDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- உலகம் பல நெருக்கடிகளை சந்தித்த நேரங்களில் இந்தியா உறுதியான அரசியல் நிலைப்பாட்டுடன் செயல்பட்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, ஆகிய மாவட்டங்களில் நாளை அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

- வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள மாவட்டங்களின் ஆட்சியர்களுடன் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

- தமிழகத்தில் மிக கனமழை, அதிகனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ள 12 மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அதிகாரிகளை மாநில அரசு நியமித்துள்ளது.

- கோவாவில் நடைபெறும் உலக செஸ் கோப்பைக்கான இலட்சினை இன்று வெளியிடப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

உலகம் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்த காலத்திலும், இந்தியா அரசியல் நிலைப்பாட்டோடு நிலைமையை திறமையாக கையாண்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையையொட்டி நாட்டு மக்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மிக குறுகிய காலத்தில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும் என்று கூறியுள்ளார்.

தற்சார்பு இந்தியா, வளர்ச்சியடைந்த பாரதம் உள்ளிட்ட இலக்குகளை எட்ட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு குடிமகனின் தலையாய பொறுப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தீபாவளி பண்டிகையின்போது, பல இடங்களில் வீடுகளில் தீபம் ஏற்றிவைத்திருந்ததை காணமுடிந்ததாக பிரதமர் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி தொடர்ந்து அதே இடத்தில் நீடிப்பதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திருமதி அமுதா தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாளை இது மேற்கு-வடமேற்காக நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்றும் கூறினார்.

சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, ஆகிய மாவட்டங்களில் நாளை அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் திருமதி அமுதா தெரிவித்தார்.

கடந்த 24 மணிநேரத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கே கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று மாலை முதல் அவ்வப்போது மிதமான மழை பெய்து வருகிறது.

இலங்கை யாழ்பாணத்தில் கனமழை பெய்து வருவதால், சென்னையிலிருந்து இலங்கை செல்லவிருந்த விமானம் இன்று ரத்து செய்யப்பட்டது.

சென்னை விமான நிலையத்தில் இருந்து புறப்படும் விமானங்களும் தரையிறங்கும் விமானங்களும் தாமதமாகி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விமான ஓடுதளத்தில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கனமழை பெய்துவருவதையடுத்து கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஆவடி தடுப்பணை திறந்துவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஆவடி, காடுவெட்டி, திருவேற்காடு, வானகரம், மதுரவாயல் கூவம் ஆற்றில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் காவேரிப்பாக்கம். வாலாஜாபாத், ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார்ச்சந்திரம், உத்திரமேரூர் பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் வாகன ஓட்டிகளும், பொதுமக்களும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

திருவாரூர் மாவட்டத்தில் 176 பகுதிகள் வெள்ள பாதிப்பு இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளதாக அம்மாவட்ட ஆட்சியர் திரு மோகன சந்திரன் தெரிவித்துள்ளார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 20 மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வெள்ள பாதிப்பு குறித்து ஆய்வு செய்த மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு, அதிகனமழை பெய்தாலும் எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் இருப்பதாக தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்த மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன், குளங்களில் தண்ணீர் இருப்பு குறித்து கண்காணிக்க வேண்டும் என்றும், உடைப்பு ஏற்படாத வகையில் தடுப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதால் சிவகங்கை மாவட்டத்தில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் பழனி வரதமாநதி அணை முழு கொள்ளவை எட்டும் தருவாயில் உள்ளதால் சண்முகாநதி கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு பொதுப்பணித்துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் துறைமுகத்தில் புயல் காரணமாக பலத்த காற்று வீசுவதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள மாவட்டங்களின் ஆட்சியர்களுடன் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களான மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் ஆட்சியர்களுடன் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் முதலமைச்சர் கேட்டறிந்தார்.

ஆற்றின் கரையோரப்பகுதிகள், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்குமாறு அவர் அறிவுறுத்தினார்.

மாவட்ட நிர்வாகம் மூலம் நிவாரணப்ணிகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

மழையால் பாதிப்பு ஏற்படும்பட்சத்தில் மக்களை தங்கவைப்பதற்காக முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும் என்றும், அவற்றில் உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்தும் ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

மழைநீர் தேங்கும் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் அவர் மாவட்ட ஆட்சியர்களை கேட்டுக்கொண்டார்.

மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர் செய்ய ஜெ சி பி இயந்திரங்கள், படகுகள், மோட்டார் பம்புகள், மர அறுப்பான்கள் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சீரான மின் விநியோகத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர். தஞ்சாவூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் நெல் கொள்முதல் பணிகள் குறித்தும் முதலமைச்சர் ஆய்வு செய்தார்.

விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் நெல் கொள்முதல் பணிகள் தொய்வின்றி நடைபெற வேண்டும் என்றும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை துரிதமாக கிடங்குகளுக்கு கொண்டு சென்று பத்திரப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சென்னை நகரில் மழை நீர் தேங்கும் பகுதிகள் கண்டறியப்பட்டு, மோட்டார் பம்புகள் மூலம் உடனுக்குடன் நீரை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநகராட்சி அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

சீரான மின்சார விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும், சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையில் மழை தொடர்பாக பெறப்படும் புகார்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மிக கனமழை, அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ள மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அதிகாரிகளை மாநில அரசு நியமித்துள்ளது.

திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகை, தஞ்சை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் உடனடியாக அந்தந்த மாவட்டங்களுக்கு சென்று கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களுக்கான இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் உடனடியாக பணிகளை தொடங்குமாறும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

பெரம்பலூரில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நாளை நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான சாலையோர மிதிவண்டி போட்டியில் மாணவ, மாணவியர் கலந்துகொள்ளுமாறு ஆட்சியர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்.

-------------

மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோவிலில் ஐப்பசி மாத அமாவாசை தினத்தை முன்னிட்டு, மூன்று தீர்த்தக் குளங்களில் சிறப்பு தீர்த்தவாரி நடைபெற்றது.

----------

காவலர் வீர வணக்க நாளையொட்டி, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள காவல்துறை ஆயுதப்படை வளாகத்தில் அமைந்துள்ள காவலர் நினைவு தூணில், காவல்துறை உயரதிகாரிகள் மற்றும் காவலர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

கோவாவில் நடைபெறும் உலக செஸ் கோப்பைக்கான இலட்சினையையும், பாடலையும் அம்மாநில முதலமைச்சர் திரு Pramod Sawant இன்று வெளியிட்டார்.

இம்மாதம் 31-ஆம் தேதிமுதல், அடுத்த மாதம் 17-ஆம் தேதிவரை இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

<<<<<END>>>>